**1. நிதிக் கூற்றுகள்**

**1.1 அபிப்பிராயம்**

தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்று நான் கருதுகின்ற எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுகளின் ஊடாக 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்-கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்தின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை

| | சட்டங்கள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவை பிரகாரம், நிதி ஒழுங்குவிதி 752(2) | தொழில்சார் தொழில்நுட்ப கல்லூரியால் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் பொருட் மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படவில்லை | 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் அவ்வப்போது காணப்பட்ட கடும் கோவிட் நோய் நிலைமைக்கு மத்தியில், பொருட் மீளாய்வுகளை மேற்கொள்வதில் தாமதங்கள் ஏற்பட்டன. | நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2008 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப கல்லூரிகள் சட்டத்தில் II ஆம் பகுதி | சட்டத்தில் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் நிறை-வேற்றும் வகையில் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை | பொறியியல் தொழில்நுட்ப விடயத்தில் நிருமாணிப்புகள், உற்பத்திகள் மற்றும் சேவை துறைகளுக்கு ஏற்புடையதான கற்கைநெறிகள் நடைமுறைப்-படுகின்றன. ஏனைய எல்லா பீடங்களிலும், மேற்படி துறை-களுக்கு ஏற்புடையதான மற்றும் சேவை பிரிவுகளுக்கு ஏற்புடை-யதான கற்கைநெறிகள் நடாத்த-ப்படுகின்றது என்பது தொடர்பாக | சட்டத்தில் குறிப்பிடப்பட் டுள்ள நோக்கங்கள் நிறைவேற்று தல் வேண்டும். |
| (இ) | 2014 பெப்ருவரி 11 ஆம் திகதிய 02/ 2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையில் 04(i) பிரிவு | ஆய்வுப் படிகள் பொருட்டு தகைமைகளைக் பெறுகின்ற அலுவலர்கள் ஆய்வுகளுக்கான முன்மொழிவை பூர்த்தி செய்து ஆய்வு முகாமை-த்துவ குழுவிடம் ஒப்படைக்கப்பட்டு அனுமதி பெற்றுக்கொள்-ளுதல் வேண்டுமாயினும், ஆய்வுகளுக்கான முன்-மொழிவுகள் சமர்ப்பிக்க-ப்படாத 43 அலுவலர்-களிடம் ஆய்வுப் படிகளாக மொத்தம் ரூபா. 13,437,487 ஐ மீளாய்விற்கான ஆண்-டில் செலுத்தப்பட்டடிரு-ந்தது. | 2020 ஆண்டில் தகைமைகளைப் பெற்றுக்கொண்டுள்ள பதவி-யணியில் 05 உறுப்பினர்கள், 2021 ஆம் ஆண்டில் தகைமை-களைப் பெற்றுக் கொண்டுள்ள 10 உறுப்பினர்கள் மற்றும் தகைமைகைளைப் பெற்றுக்-கொண்டுள்ள 05 பேர்கள் பொருட்டு கருத்திட்டங்களின் முன்மொழிவுகளுக்கான ஆய்வுப் படி செலுத்தப்படுதல். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஏற்புடைய கொடுப்பனவு களை மேற்கொள்ளு தல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் பயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு பயன் ரூபா.57,072,162 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா.97,201,012 ஆகும். அதன்படி நிதிசார் பயனில் ரூபா.40,128,850 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த வளர்ச்சிக்கு மீண்டுவரும் அளிப்புகள் ரூபா..50,380,825 ஆல் அதிகரித்தல் பிரதான காரணியாக அமைந்துள்ளது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகக் கல்லூரி மூலம் உருவாக்கப்படும் டிப்ளோமா பெறுபவர்களுக்கு மேலதிகமாக, இந்தப் பல்கலைக்கழகம் தேசிய தொழிற்கல்வித் தகைமைகள் (NVQ) முறையின் மூலம் | இதற்கு தேவையான சமூக ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள், ஊடக கலந்துரையாடல்கள் மற்றும் மாவட்ட அலுவல-கங்களில் தொழில்சார் | பாடசாலை கட்டமை-ப்பில் மாணவர்களை அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்துவத |

| | | |
|---|---|---|
| உயர்கல்வி கற்பதற்கு எதிர்பார்க்கும் மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பிய பல்கலைக்கழகமாகும் என்பதால், இந்தப் பல்கலைக்கழகத்தைப் பிரபலப்படுத்துவதன் மூலம் மாணவர்களை அறவுறுத்த முடியுமாயினும், அது தொடர்பில் எந்தவொரு திட்டமும் செயல்படுத்தப்படவில்லை. | ஆலோசகர்கள் மூலம் பாடசாலை கட்டமைப்பையும் அறிவுறுத்தப்படல். | -ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டத்தின் படி, வெளி தரப்புகளின் ஒத்துழைப்புடன், புதிய பட்டப்படிப்புகளை அறிமுகப்படுத்து-வதன் கீழ், புடைவை மற்றும் ஆடைக் கைத்தொழில் தொழில்-நுட்பம் தொடர்பான இளங்கலை பட்டம், விருந்தோம்பல் முகாமைத்-துவம் தொடர்பான இளங்கலை பட்டம் மற்றும் கல்வி தொடர்பான முதுகலை பட்டம் ஆகிய கற்கைநெறிகளை அறிமுகப்படுத்தியிருப்பினும், குறித்த கற்கைநெறிகளை தொடங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட-வில்லை. | இந்தப் பட்டப்படிப்புகளின் பொருட்டு இலங்கை புடைவைக் கைத்-தொழில் மற்றும் ஆடை நிறுவனம் மற்றும் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் நிறுவனம் ஆகிய 02 உடன் 2022.03.23 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை குறித்த இரண்டு நிறுவனங்கள் மூலம் ஒரு தரப்பாக மீறப்படுதல். | அறிமுகப்படுத்தியுள்ள கற்கைநெறிகளை துரிதமாக தொடங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 பயனற்ற அல்லது குறைப் பயன்பாட்டுடன் கூடிய சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஈ- நூலகச் சேவை தாபிக்கும் பொருட்டு ரூபா. 4,003,504 செலவிடப்பட்டிருப்பினும், அதனை முனைப்பாக பராமரிப்பதற்கு இயலாமை காரணமாக அவ்வாறு மேற்கொண்ட செலவினம் பயன-ற்றதாக காணப்பட்டது. மேலும் ஈ - நூலகத்தால் அகற்றப்பட்ட 20 கணினிகள், 05 ஸ்டுடியோ கபட்கள், மற்றும் 20 கதிரைகள் ஓராண்டுக்கு அதிகமான காலம் பயனற்று காணப்பட்டது. | ஈ- நூலகச் சேவை பிரதான நூலகத்திற்கு வெளியே மற்றொரு கட்டிடத்தில் தாபிக்கப்பட்டிருந்தது. மட்டுப்படுத்திய பதவியணியினர் நூல-கத்தின் சேவையில் ஈடுபட்டுள்ளதால், 02 இற்கும் பதவியணி பிரித்து ஈடுபடுத்தல் என்பது கஷ்டமான விடயமாகும். | வளங்களை ஆகக்கூடிய வினைத்திறன் மற்றும் பயனுள்ளதாக உபயோகப்படு த்தல் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தொழில்சார் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் பல்நோக்கு ஸ்ட்டுடியோ வளாகம் மற்றும் விரிவுரை மண்டப வளாகத்துடன் கூடிய கட்டிடம் நிருமாணிப்பதற்கு 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் 27 ஆம் திகதி அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்ததுடன், அதற்காக ரூபா.மில்லியன் 434.4 ஐ பொது திறைசேரியிடமிருந்து மற்றும் துறைசார் திறன் அபிவிருத்தி கருத்திட்டம் மூலம் ஒதுக்கப்-பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் அதில் ரூபா. மில்லியன் 304.5 செலவிட-ப்பட்டிருந்ததுடன், இந்த கட்டிடத்தில் கண்டறியப்பட்ட குறைபாடுகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும் இந்த ஆண்டு இறுதி வரை இந்தக் கட்டிடம் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்படவில்லை. | எம்மால் அடையாளம் காணப்பட்ட குறைப்பாடுகளை பொறியியல் ஆலோசகர் பணியகத்தால் சரி செய்யும் வரை, உரிய கட்டிடத்தின் பிரதான கலையகம் (Main Studio) எமது பல்கலைக்கழகத்திலும் பல்கலைக்கழக கல்வி நிறுவன-ங்களிலும் (University Colleges) மாணவர்களின் செய்முறை கல்வி நடவடிக்கைகளின் பொருட்டு பன்படுத்தப்படும்.<br><br>ஆயினும், கண்டறியப்பட்ட குறைப்பாடுகளை அவர்களால் சரிசெய்கின்ற வரை அவர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளை இடை நிறுத்தப்பட்-டுள்ளது. (Main Studio) சம்பந்தப்-பட்ட நிறுவனத்தில் மேல்-மாகாணத்தில் பிரதி முகாமையாளரால் குறைப்பாடகளை துரிதமாக சரிசெய்வதற்கு இணங்குதல். | அரசாங்க செலவின-ங்களை ஆகக் கூடியதாக பயன்-படுத்தி தற்போதுள்ள நிலைமையிலா வது பயன்படுத்தல் வேண்டும். |
| (இ) | 2014 யூன் 23 ஆம் திகதியில் காப்புறுதி பெறுமதி ரூபா. 1,650,000 ஆன பேருந்து வண்டியொன்று 2019 மார்ச் 21 ஆம் திகதி தொடக்கம் கணக்காய்வு திகதி வரை 2023 சனவரி 09 ஆம் திகதி வரை பயன்படுத்தாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பேருந்து வண்டியை பழுதுபார்ப்பதற்காக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா.மில்லியன் 1.5 என்ற வகையில் மதிப்பீட்டுக் குழுவால் குறிப்பிடப்பட்டிருப்பினும், அதற்கு போதியளவில் நிதி ஒதுக்கீடு இருக்கவில்லை. அதற்காக உரிய பணத் தொகை 2021 ஆம் ஆண்டின் ஒதுக்கீடுகளில் முகாமைத்துவம் செய்துக் கொள்ளுமாறு தேசிய வரவு செலவு திணைக்களத்திடமிருந்து அனுமதி கிடைக்கப்பெறுதல். | துரிதமாக திருத்தப் பணிகளை மேற்கொள்வத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | தொழில்சார் தொழில்நுட்பக் கல்லூரியின் பரீட்சைப் பிரிவின் நடவடிக்கைகளுக்காக (EMIS) கணினி அமைப்பு தயாரிக்கப்பட்டிருந்ததுடன், குறித்த முறைமையின் பாவனையாளர்களை நிர்வகிப்பதற்கு உரிய கொள்கை தயாரிக்கப்படவில்லை என்பதுடன், கணினி அமைப்பைக் கணக்காய்வு செய்வதற்கான வசதியும் கட்டமைப்பில் முறைமையில் காணப்படவில்லை. (Audit Trails) மாணவர்களின் நடவடிக்கைகள் மற்றும் பரீட்சை நடவடிக்கைகளை நிருவகிப்பதற்கு போதியள-விலான வசதிகள் அமைப்பில் இல்லாத படியால் குறித்த குறைப்பாடுகளை செவ்வை-யாக்குவதற்கும் நவீனமயப்படு-த்துவதற்கும் அதனைத் தயாரித்த நிறுவனத்திற்கு | பல்கலைக்கழகத்தின் பரீட்சைப் பிரிவின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் கணினி அமைப்பில் (Education Management Information System – EMIS) ஒரு நிர்வாக பயனர் கணக்கு உள்ளதுடன், அந்தக் கணக்கு பரீட்சைப் பிரிவின் தலைவரிடம் உள்ளது. பரீட்சைப் பிரிவின் ஏனைய அலுவலர்களிடம் அவர்களின் கடமைகளுக்கான எல்லைக்குள் அவர்களுக்கு ஏற்புடையதாகும் வகையில் ஒவ்வொரு பிரிவிடமும் கணினி முறைமையில் அணுகல் வசதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக கணினி அமைப்பில் காணப்படுகின்ற தகவல்களை அகற்றல் அல்லது வேறுப்படுத்தல் போன்ற விடயங்களுக்காக admin கணக்கு உரித்துடைய தலைவரிடம் மட்டும் வழங்கப்பட்டுள்ளது.<br><br>தற்போதுள்ள அமைப்பில் செயல்பாட்டு | அமைப்பை தாபிக்கும் நோக்கம் நிறை வேற்றும் வகையில் சம்பந்தப்பட்ட கணினி முறைமை செயற் படுத்தல் மற்றும் மேம்படுத்தல் ஏன்பன மேற்கொள்ளுத ல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| முடியாதிருந்தது. மேலும் மனிதவள முகாமைத்துவ கணினி மென்பொருள் அமைப்பிற்காக (SUWAS) ரூ.281,250 செலவிடப்பட்ட போதிலும், அறிக்கையின் திகதி வரை செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வரவில்லை என்பதுடன், பல்கலைக்கழகத்தில் காணப்பட்ட 08 கணினி ஆய்வகங்கள் குறை பயன்பாட்டு நிலையில் காணப்பட்டது. | பதிவை பராமரிக்க முடியாது. (Activity Log) ஆகையால் தரவுகளை உள்ளடக்குதல், மாற்றுவது அல்லது அகற்றுதல் போன்ற பணிகளைச் செய்தவர்களின் நேரம் மற்றும் தேதி போன்ற அடிப்படை தகவல்களைக் கூட பெறுவதற்கு முடியாதுள்ளது. | |

## 3.4 கருத்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2017 சனவரி 03 ஆம் திகதி அபஇ /16/2673/720/030 இன் படி, ஒரு வேலைத்தளம், 600 மாணவர்களுக்கான தங்குமிடம் மற்றும் 300 இருக்கைகள் கொண்ட சிற்றுண்டிச்சாலை நிருமாணிப்பதற்கு ரூபா. மில்லியன் 927.34 மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டது. 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ரூ. மில்லியன் 281.36 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்தத் தொகையில் ரூபா.மில்லியன் 22.5 ஆலோசனைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. உயர் முகாமைத்துவம் உரிய நேரத்தில் தீர்மானம் எடுக்காமை காரணமாக மீளாய்விற்கான ஆண்டில் இந்த கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 05 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் முடிவடைந்திருப்பினும், நிறைவு செய்வதற்கு முடியாதிருந்தது. மேலும் இந்தக் கருத்திட்டம் 2022 யூன் மாதம் ரூபா.மில்லியன் 3,046.8 தொகையில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், திட்டத்தின் ஆரம்ப காலத்துடன் ஒப்பிடுகையில் செலவு 300% அதிகமாக காணப்பட்டது. | ஆறு வருடங்களுக்கு முன்னர் எமது நிறுவனத்தின் எதிர்காலத் தேவை-களைக் கண்டறிந்து அதற்குத் தீர்வாக வேலைத்தளம், தங்குமிடம், மற்றும் சிற்றுண்டிச்சாலை என மூன்று கட்டிடங்களை நிருமாணிப்பதற்கு எம்மால் தீர்மானிக்-கப்பட்டது. இது தொடர்பான திட்ட முன்மொழிவு கடந்த 2016 மே 31 ஆம் தேதி அமைச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய அனுமதி பெற்றுக்-கொண்டுள்ளதுடன், பல்வேறு பிரச்னைகளால் தற்போது வரை பணிகளை முடிவுறுத்துவதற்கு இயலாதுள்ளது. | அரச நிதியை ஆகக்கூடிய வினைத்திறன் மற்றும் பயனளிக்கும் வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியின்றி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இலலாத Director Staff Development Centre என்ற பதவிக்காக ஓர் அலுவலர் 2020 திசெம்பர் 20 ஆம் திகதி | இப்பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் மற்றும் பௌதீக வளர்ச்சியின் விரிவாக்கத்துடன், திறமையான மற்றும் வினைத்திறனான சேவையை வழங்குவதற்கு ஆளுகைச் சபையின் அனுமதியுடன் பதவியணி அபிவிருத்தி நிலையம் தாபிக்கப்பட்டது. இந்த நிலையத்தின் | ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்கையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத் தின்அனுமதி |

| | | | |
|---|---|---|---|
| | தொடக்கம் 2022 மார்ச் 30 ஆம் திகதி வரையும், மேலும் ஓர் அலுவலர் 2022 ஏப்ரல் 01 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 30 ஆம் திகதி வரையும் நியமனம் செய்து மொத்தம் ரூபா.3,758,629 செலுத்தப்பட்டுள்ளது. | கடமைகளை மேற்பார்வையிடுவதற்காக இரண்டு உள்ளக சிரேஷ்ட விரிவுரையாளர்கள் பணிப்பாளர் SDC ஆக நியமிக்கப்பட்டனர். பதவிக்கு உரியதான அலுவலக தொலைபேசி கொடுப்பனவு, போக்குவரத்து கொடுப்பனவு மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகள் மட்டும் வழங்கியுள்ளதுடன், ஏனைய கொடுப்பனவுகள் சிரேட்ட விரிவுரையாளர் பதவியின் சம்பளத்திற்கான கொடுப்-பனவுகளாகும். அதன்படி இரண்டு அலுவலர்களுக்கும் ரூ.1,878,114.03 மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. | பெற்றுக்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | முழுமையான சம்பளத்துடன், 01 ஆண்டு தொடக்கம் 2½ ஆண்டுகளிலான காலப் பகுதிக்கு லீவு பெற்றிருந்த 04 பேர்களிடம் அரசாங்க-த்திற்கு அறிவிடப்பட வேண்டிய பிணை பெறுமதி ரூபா 11,086,021 காணப்பட்டதுடன், குறித்த பணம் அறவிடுவதற்கு மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை நடவடிக்கை மேற்கொள்வில்லை என்பதுடன், அதில் ஒரு அலுவலர் சேவையிலிருந்து விலகிச் சென்றிருந்தார் | கற்கை லீவு பெற்றுக்கொண்டு தமது பட்டப்பின் படிப்பு நடவடிக்கைகளை இதுவரை முடிவுறுத்தாத மூன்று அலுவலர்களிடம் தமது கற்கை பணிகளை முடிவுறுத்தும்படி அறிவிக்கப்படுமென்பதுடன், முடிவுறுத்த இயலாத அலுவலர்கள் தொடர்பில் உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ள அலுவலரால் செலுத்தப்பட வேண்டிய பிணை பெறுமதி அறவிடுதல் தொடர்பில் ஆலோசனை பெற்றுக்கொள்வதற்கு 2023.05.24 ஆம் திகதி நடாத்தப்படுகின்ற ஆளுகைச் சபை கூட்டத்தில் பத்திரம் சமர்ப்பிக்கப்படும். | உரிய உடன்படி-க்கைகள் பிரகாரம் பணியாற்றுதல் வேண்டும். |